
56

உ

சிவமயம்.

# திருநள்ளாறு
# சனிப் பெயர்த்தி மகிமை.



காரைக்குடி பி. அ. தேவார பாடசாலை

**தேவார ஆசிரியர் அ. நடேச தேசிகர்**

அவர்களால் எளிய நடையில்
யாவரும் தெரிந்து பயன்பெறுமாறு சுருக்கமாய் எழுதி
வெளியிடப் பெற்றது.

பிரஸ், காரைக்குடி

935

Q2:38.2195 JR
N35
171920.

உ

சிவமயம்.

திருநள்ளாறு

# சனிப்பெயர்த்தி மகிமை

இத்துடன்

## க்ஷேத்திர மகிமையும்
## சனீஸ்வரபகவான் தோத்திரப் பதிகமும்
## நவக்கிரக தோத்திரமும்

அடங்கி இருக்கிறது

இஃது

சிவநேசச் செல்வர்கள் விரும்பியவண்ணம்

காரைக்குடி

பி. அ. தேவாரபாடசாலை தேவார ஆசிரியர்

**அ. நடேச தேசிகரவர்களால்,**

எளிய நடையில்

யாவரும் தெரிந்து பயன்பெறுமாறு

சுருக்கமாய் எழுதப்பெற்று

காரைக்குடி ஸ்ரீமான் பழ. மெ. மெ.

**பழனியப்பச் செட்டியார் அவர்கள்**

பொருளுதவியின் மேல் அச்சியற்றப்பெற்றது.

2 - APR 1935
MADRAS

செட்டிநாடு பிரஸ்,
காரைக்குடி.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருநள்ளாறு

# க்ஷேத்திர மகிமை.

வருநள் ளாற்றா வாடிய மாயனை
யொருநள் ளாற்றி லுரங்கிட வுய்த்திடு
திருநள் ளாற்றுறை செம்பொற் களிற்றைநங்
கருநள் ளாற்றைக் கடக்க வணங்குவாம்.

சீர்பெருங் கடலாற்சூழ்ந்து சிறப்புற்றோங்கிய சோழவள நாட்டில் அரிசொன்மாநதியின் வடபால் தற்பவனேச்சுர மென்னும் திருப்பெயர் பூண்டதும் தர்ப்பாரண்யேஸ்வரரும் போகமார்த்த பூண்முலைநாயகியும் எழுந்தருளப் பெற்றது மாகிய திருநள்ளாறென்னும் மகாக்ஷேத்திரமானது மிகவும் மேன்மை பெற்றதும் முதல் யுகத்தில் ஆதிபுரியெனவும், இரண்டாம்யுகத்தில் தர்ப்பாரண்யமெனவும் மூன்றாம்யுகத்தில் விடங்கபுரமெனவும் நான்காம் யுகத்தில் நளேச்சரமென விளங்கப்பெறுவதுமாகிய இத்தலத்தில்,

கலிங்காதிபதி பிராமணசாபத்தால் வந்த யானையுரு நீங்கி வழிபட்டதும் கோக்கொலை செய்த வேதியர் கோஹத்தி நீங்கி யுழவாரத்திருப்பணி செய்துகொண்டிருந்து சிவனடி சேர்ந்ததும் உருசிராஜன் அன்னதானஞ்செய்து முத்தியடைந்

ததும் தெண்டிகுப்த்தன் புத்திரர்களாகிய அக்கினி வண்ணர் பூஜித்துத் தம்பாவமொழிந்து சிவசாரூப்ய மடைந்ததும்,

நளச்சக்கிரவர்த்தியானவர் சனீஸ்வர பகவானாற் பீடிக்கப்பெற்றுகங்காதீர முதற் காவேரி தீரமுள்ள பல க்ஷேத்திரங்களையும் தெரிசித்துக்கொண்டு திருக்கோகரண மென்னும் மகாக்ஷேத்திரம் வர அங்கு வசித்த பரத்துவாச முனிவரால் இத்திவ்ய ஸ்தலத்தின் மான்மியங்கள் யாவும் உபதேசிக்கப்பெற்று இத்தர்ப்பாரண்ய மகாக்ஷேத்திரத்தைஅடைந்து பிரம்ம தீர்த்தத்திற்படிந்து திருச்சந்நிதியிற் சென்று பஞ்சாங்க அஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து, எழுந்து சிரமேற் கரங்குவித்து கோபுர வாயிற்புகும்போது கொடியெனுங்காகத்தை கொடியு நடையுமாகக்கொண்டு, கைத்த கருத்த திருமேனியுங், கரத்தொரு பருத்த சூலாயுதத்தையுந் தாங்கப்பெற்ற சனிபகவான் இனி அரசனை யலைப்பமேல் திரிபுரதகனன் திருவுளப்பாங்கினுக்கு அபராதியாகுவோ மென்றஞ்சி வானிற்றோன்றி மறையும் மின்னற்கொடிபோல் நளபதியிடத்திருந்து தோன்றி யகலவும் பாரச்சுமையிறக்கும் பரிசுபோல விரைந்துட்புகுந்து சிவகணாதிபதி திருவடிபணிந்தெழுந்து சிவலிங்கச்செழுஞ்சுடர் முன்னணுகி அபிடேக ஆராதனைகளும் புரிவித்து நவரத்ன கஜித கனகாபரணங்களாலும் அழகிய பட்டாடைகளாலும் அலங்கரித்து ஆஜாரநாமங்களால் அருச்சனை புரிவித்து அருந்தமிழ்ப் பாமாலைகளால்,

விளங்கிழை மடந்தை மலைமங்கை யொருபாகத்
துளங்கொள விருத்திய வொருத்தனிட மென்பர்
வளங்கெழுவு தீபமொடு தூபமலர்தூவி
நளன்கெழுவி நாளும்வழி பாடுசெய் நள்ளாறே. (சம்பந்தர்)

தோத்திரம் புரிந்து உழுவாலன்புடையார் போன்று இருகண்களினின்று மானந்த பாஷ்பம் பெருக, புளகாங்கித ரோமஞ்சிலிர்ப்ப நின்றுருகிச் சிந்தையைச் சிவனிடத்தாக்க, கோடிசூரியப்பிரகாசம்போலொரு ஜோதி தோன்றி மன்னனே உனக்கென்ன வரம் வேண்டுமென்றருள. நளபதி அடிபணிந்தெழுந்து இந்த க்ஷேத்திரத்திற்கும் தீர்த்தத்திற்கும் அடியேன் நாமகரணத்தையே அளித்தருள வேண்டுமென்றும் அத்தீர்த்தத்தில் இறங்கி ஸ்னானஞ் செய்பவர்களது தோஷ ரோக முறைப்பாடு,. ஏவல், வைப்பு. கிரகதோஷ, வக்ர நவக்கிரகங்களின் பீடிதமும் அகன்றிடவும் தம்மைப் பீடித்த சனீஸ்வர பகவானும் யாதோரிடுக்கணுமின்றி இத்தலத்திலேயே வசிக்கவேண்டுமென்றும் அவருடைய உபாதையினால் தேவர்கள் ரிஷிகள் பூபாலர் முதலிய யாவரும் இம்மகா க்ஷேத்திரத்திற்கு ஒரு யோசனை தூரபரியந்தம் எடுத்தடி வைத்தாலும் வசித்தாலும் ஜென்மங்கடோறும் சனீஸ்வரபகவான் உபாதை நேரிடாதிருக்கவேண்டுமென்றும் பிரார்த்தித்துக்கொண்டனர். கிருபாநிதியாகிய சிவபெருமான் நளச்சக்கிரவர்த்தியின் மனோரதப் பிரகாரம் அருள்செய்ய விடைபெற்று இத்தலத்தில் திருப்பணி முதலானவைகள் செய்து வசந்தருதுவாகிய வைசாக மாதம் புனர்பூசநாளில் துவஜாரோகணமும் விசாகத்தில் தீர்த்ததானப் பெருவிழாவும் நிறைவுற ஆண்டாண்டுதோறும் இயல்புற தவறாது நடாத்தி பன்னிரெண்டு வருடம் இத்தலத்திலிருந்து சங்கரன் விடைகொண்டு போங்கர் நன்னாடாகிய தங்கள் நிடத நாடடைந்த பெருமைவாய்ந்ததும்,

முசுகுந்தச் சக்ரவர்த்தி பிரதிஷ்டை செய்த ஸப்தவிடங்க ஸ்தலங்களில் ஒன்றாயுள்ளதும் பிரமதேவர் திக்குப்பாலகர் விஷ்

னுமூர்த்தி வசுக்கள் காசிபர் அகஸ்தியர் அருச்சுனன் போஜராஜர் முதலியோர் பூஜித்துப் பேறுபெற்றதும்,

சமயாச்சாரிய சுவாமிகளால் திருவாய்மலர்ந்தருளிய தேவாரத் திருப்பதிகங்கள் ஏழுடையதும் அருணகிரிநாதர் திருப்புகழொன்றுடையதும், திருஞானசம்பந்த சுவாமிகள் மதுரையில் சமணர்களோடு அக்கினிவாதஞ் செய்தகாலையில் தமது திருமுறையிற் கயிறுசாத்தியருள,

போகமார்த்த பூண்முலையா டன்னோடும் பொன்னகலம்
பாகமார்த்த பைங்கண் வெள்ளேற் றண்ணல் பரமேட்டி
யாகமார்த்த தோலுடையன் கோவணவாடை யின்மே
லாகமார்த்த நம்பெருமான் மேயது நள்ளாறே.

என்னும் இத்தலத்திருப்பதிகம் நேர்ந்தது. பிள்ளையார் இத்தலத்தை வணங்கி திருப்பதிகம் எழுதப்பட்ட திருவேட்டைக் கழற்றி சிவபெருமானே மெய்ப்பொருள் என்பதை சமணர்க்கும் உணர்த்தும்பொருட்டு இவை அக்கினியில் இடப்படுமாயின் பழுதில்லை. இது சத்தியம் என்னும் கருத்தை யுடைய

தளிரிளவள ரொளிதனதெழி றருதிகழ்மலைமகள்
குளிரிளவள ரொளிவனமுலை யிணையவைகுலவலி
னளிரிளவள ரொளிமருவு நள்ளாரர்த நாமமே
மிளிரிளவள ரெரியிடி லிவைபழுதிலை மெய்மையே.

என்னும் திருப்பதிகத்தைப் பாடி அங்குள்ளார்க ளெல்லோருங் காண அவ்வக்கினியிலே ஏட்டை இட்டருளினர்.

அவ்வேடு முன்னேயிலும் பசுமையும் புதுமையும் உடைத்தாய் விளங்கிற்று.

அப்பதிகம் வேகாதிருந்தமைபற்றி யின்றளவும் அத் திருப்பதிகத்திற்குப் பச்சைத் திருப்பதிகமென்று பெயர் வழங்கப்பெறுவதும்,

இவ்வாலயப் பசுநிரை மேய்ப்போனாகிய சீதாரி என்னும் ஓர் இடையன் தினமும் சுவாமிக்கு அபிஷேகத்திற்குப் பால் கொடுப்பதை ஆலயக்கணக்கன் தன் வீட்டிற்கு கொண்டுவந்து கொடுக்கச் சொல்ல அவன் கொடாமையால் கணக்கில் பதிவு செய்யாதுவிட தர்மகர்த்தர்கள் கணக்கு பார்வையிடும்போது பால் வரவு வாராமைக்கு இடையனைத் துன்புறுத்த அவன் உண்மை சொல்லியுங் கேளாது அன்றிரவு ஓர் அறையிற் போட்டுப் பூட்டிவைக்க தியாகேசப்பெருமான் நள்ளிரவில் அவன்பாற் சென்று கிருபை கூர்ந்து அன்பனே நாளையுன்னைத் துன்புறுத்துவார்களேயாகில் அக்கணக்கனை சந்நிதானத்தின் முன்புநின்று உண்மை சொல்லும்படி கேட்பாயாக வென்று சொல்லி மறைந்தருள மறுநாட்காலையில் அப்படியே அவர்கள் வந்து துன்புறுத்தமுயல ஏழையேனாகிய யான் சொல்லும் வார்த்தையை தாங்கள் பொய்யென மதிப்பீர்களேற் அக் கணக்கனையே சன்னிதியின் முன்பு நின்று உண்மையுறைக்கச் செய்யுங்களென்று சொல்ல அப்படியே அவர்களும் கணக்க னுக்கு ஆக்ஞைசெய்ய அதிபாதகனாகிய அக்கணக்கன் பொய் சொல்லச் சிறிதுமஞ்சாது சந்நிதியின் முன்பு நின்று பொய் யான வார்த்தையைப் புகல திரிபுரதகனன் திருக்கரத்துள்ள மழுவாயிதம் கணக்கன் சிரத்தை சேதிக்க (வரும்போது பலி பீடம் விலகிட இன்னும் அப்பலிபீடம் விலகினபடியே இருத்தலைக் காணலாம்) இடையனுக்கு தியாகேசப்பெரு

மான் காக்ஷி கொடுக்கப்பெற்றதும் (இந்த ஐதிகம் பிரமோற்சவத்தில் ஓர்நாள் தியாகேசப்பெருமான் நள்ளிரவில் யாதோர் சப்தமிலாது எழுந்தருளிவந்து இடையனுக்கு காக்ஷி கொடுப்பது தெரிசிக்கற்பாலது,) இன்னும் அனேக மகிமாதிசயங்களால் விளங்கப்பெறுவதுமாகிய இத்திருநள்ளாற்றை யாவரும் தெரிசித்து நளேஸ்வரசுவாமியின் நளின பதங்களைப் போற்றி வாழ்வோமாகவும்.

சுவாமி பெயர் தர்ப்பாரண்யேஸ்வரர்,
தேவியார் போகமார்த்த பூண்முலையம்மை,
தியாகர் நகவிடங்கத்தியாகர் உன்மத்தனடனம்.

குறிப்பு:-இவ்வூர் பேரளம் காரைக்கால்லயனில் திருநல்லார் என்ற ஸ்டேஷனையுடையது. ஸ்டேஷனிலிருந்து தெற்கே இரண்டு பர்லாங்கு தூரத்திலுள்ளது.

இவ்வாலயப்பரிபாலனம் தருமபுர வாதீனகர்த்தரவர்களாலும் பஞ்சாயித்தார் நால்வர்களாலும் செவ்வனே கவனிக்கப்பெறுவது. தெற்குவீதியில் தருமபுர ஆதீனமடமும் மேலவீதியில் சுவர்க்கபுரமடமும் வடக்கு வீதியில் குன்றக்குடி ஆதீனமடமும் காரைக்கால் தனவந்தர்களுடைய இரண்டு சத்திரங்களும் உள. இத்தலத்தில் நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் வந்து தங்கி சுவாமி தெரிசனஞ் செய்து போவதற்கு ஓர் விடுதி யிலாதிருப்பது மிகவும் கவனிக்கத்தக்கது.

கோவிலுக்கு வாய்வு திக்கில் நளதீர்த்தமும் அதன் பக்கத்தில் விநயகாலயமும் காசிக்கெங்கைக்கிணறும் வைரவர் முகூர்த்தமும் உளது. இத்தீர்த்தத்தில் சனிப்பெயர்த்தியன்று

பல்லாயிரக்கணக்கான ஜனங்கள் திலதைல மிட்டு ஸ்னானஞ் செய்து சனீஸ்வரபகவானுக்கு திலதீபமிட்டு அர்ச்சனாதிகள் செய்து தெரிசிப்பார்கள். அன்றிரவு வெள்ளிக்காக வாகனத்தில் சனீஸ்வரபகவான் பக்தகோடிகளை ரக்ஷிக்கும் பொருட்டு பிரகாரத்தில் எழுந்தருளி காக்ஷிகொடுத்தருளும் வைபவத்தை யாவரும் தெரிசிக்கற்பாலது.

இவ்வாலய கீழ்பால் பிரமதீர்த்தமும் தென்பால் சரஸ்வதி தீர்த்தமும் மேல்பால் அம்ஸதீர்த்தமும் இன்னும் பலவுள. கோபுர வாயில் வெளிப்பக்கத்தில் இடையனுக்கு காக்ஷி கொடுத்த ஆலயமும், உட்பிரகார தென்புறத்தில் நளமகாராஜா திருவுருவமும், வடபுறத்தில் தெற்பை விருக்ஷமும், உட் கோபுரவாயில் இடதுபுறத்தில் ஓர் மாடப்பிறையில் சனீஸ்வர பகவான் காகவாகனத்தில் எழுந்தருளியிருப்பதும் வடக்கு வீதியில் நளநாராயணப் பெருமாள் ஆலயமும் இன்னும் பல ஆலயங்களும் உளது. இத்தலத்தில் எக்காரணத்தை உத்தே சித்தும் ஒருவர் வந்து தங்கியிருந்தாலும் அவர்களுக்கு உண்டாகும் உபாதைகளெல்லாம் நீங்கிச் சுகமாய்த் தங்கள் வாஜஸ்த்தானங்களுக்குப் போய்ச் சேருகின்றார்களென்பதை யித்தலத்தில் கண்கூடாய்ப் பார்க்கலாம். இது நளமகாராஜாப் பெற்றுக்கொண்ட வரத்தின் பெருமை போலும். பிரஞ்சு கவர்ன்மெண்டிற்குட்பட்ட எல்லையில் இத்தலத்திற்கு மேற்கே மூன்று மைலில் தூரத்தில் இளையான்குடி மாறநாயனார் திரு வவதாரஞ் செய்த க்ஷேத்திரமும், திருநள்ளாற்றிற்கு கிழக்கே இரண்டு மயில் தூரத்தில் வைப்புஸ்தலங்களி லொன்றாகிய தக்களூர்என்னும் ஸ்தலமும், அதற்குகீழ்பால் இரண்டுமயிலில் தருமபுர ஆதீன தேவஸ்தானங்களில் ஒன்றாயுள்ள திருத்தரும

புரமும் அதற்கு ஈசான்ய மூலையில் புனிதவதியா ரென்னும் காரைக்காலம்மையார் திருவவதாரஞ் செய்த தலமாகிய காரைக்காலும் (இவ்வூரில் இன்னும் பல ஆலயங்களும் உள,) இதற்கு வடபால் அரைமயிலில் புத்தநந்தியின் தலை இடியினால் சிதருண்ட திருத்தெளிச்சேரி என்னும் ஸ்தலமும், இத்தலத்திற்கு ஈசான்யதிக்கில் மூன்று மயில் தூரத்தில் அர்சுனற்கு வேடரூபமாக வெளிப்பட்ட திருவேட்டக்குடி என்னும் ஸ்தமும் ஆக ஏழு பிரதானமான ஸ்தலங்களும் இன்னும் பல ஆலயங்களும் உள.

முற்றிற்று.

உ

சிவமயம்.

# திருநள்ளாறு
# சனிப்பெயர்த்தி மகிமை

ஸ்ரீ சனீஸ்வரபகவான் ஆன்மகோடிகளை ரக்ஷிக்கும் பொருட்டு இரண்டரை வருடத்திற் கொருமுறை ஒரு இராசியிலிருந்து மற்றொரு இராசிக்குப் பிரவேசஞ் செய்வார். அப்படி பிரவேசிப்பதை சனிப்பெயர்த்தி என்று சொல்லுவார்கள்.

அப்படி பிரவேசிக்கும் தினத்தில் இத்திருநள்ளாறென்னும் திவ்யக்ஷேத்திரத்தில் வந்து சனீஸ்வர பகவானை தெரிசிப்பவர்களுக்கு சகலதோஷங்களையும் நீக்கி நிறைந்த ஆயுளையும் சகல சம்பத்துக்களையும் அளித்து அருள் செய்வார்.

இப்படி இரண்டரை வருடத்திற்கொருமுறை வருவதில் தனக்குச் சொந்தமான மகர கும்ப இராசிகளிலும் தனக்கு உச்சஸ்தானமாகிய துலா இராசியிலும் பிரவேசிக்கும் காலத்தில் வந்து தெரிசிப்பவர்களுக்கு ஆயுள் தீர்க்கமும் சௌக்யமும் வலிமையும் இன்பத்தையும் செல்வத்தையும் ஆரோக்கியத்தையும் பதி படை முதலான சகல சம்பத்துக்களையும் அளித்து அனுக்கிரகஞ் செய்வார்.

இப்படி தனக்குச் சொந்த உச்ச இராசிகளிற் பிரவேசிப்பது மிகவும் விசேஷ மென்பார்கள். இப்படி வருவது முப்பது வருடத்திற் கொருமுறைதான் வரும் மற்றவை ஸ்தல மகிமையிற் றெரிந்து கொள்ளவும்.

உ

திருச்சிற்றம்பலம்.



# சனீஸ்வர பகவான்

## தோத்திரப் பதிகம்.

மட்டவிழ் கொன்றையும் மத்தமுஞ்சூடு மகேஸ்வரனைக்
கட்டவிழ் கொங்கைத் திருவை முபங்கிடுங் கார்முகிலைக்
கட்டப்படுத்திய நின்றகை கேட்டுன் கழல் பணிந்தேன்
அட்டமத் துச்சனி யீசாவடேலிவ் வடியனையே (1)

171920
600 008.

வட்டக்கய மலர்மேவு பிரமனும் வன்மைபெறு
கட்டவிழ் வெண்டோல் கடாவுகக்னக் கரியவனும்
பட்டதுய ரிணைக்கேட்டுன் மலர்த்தாள் பணிந்து நின்றேன்
அட்டமத்துச்சனி யீசாவடேலிவ் வடியனையே. (2)

வட்டப்புவிக்குநற் றண்ணொளி யீயும் வளர்மதியும்
உட்டணஞ்செய் வெயில்கானு மொளிகொள் ளுதயனுமே
கட்டமுடன்பட்ட கட்டமறிந்துன் சரணடைந்தேன்
அட்டமத்துச்சனி யீசாவடேலிவ் வடியனையே. (3)

கொட்டுநிதிக் கரசாகி விளங்குங் குபேரனுக்கும்
அட்டன்று காண்டவ முண்டகடவு ளனலனுக்கும்
இட்டமுட னிட்டதுன் பறிந்துன்பதத் தீடுபட்டேன்
அட்டமத்துச்சனி யீசாவடேலிவ் வடியனையே. (4)

Rs. 12/95
N35

வெட்டுங் குணமுடைத்தானவர் கோனெனும் வெள்ளி
குட்டுங் கொளுநற் கணபதியென்னு மக் குஞ்சரனைத்[யினைக்
தட்டநிகர் துன்பஞ் செய்திறங் கேட்டுநின்று ளடைந்தேன்
அட்டமத்துச்சனி யீசாவடேலிவ் வடியனையே. (5)

குட்டுணியாற்கல கஞ்செயு நாரதக் கோமுனிக்கும்
எட்டுணையும்மற நீங்காப் பாசுடை ராமனுக்குங்
கொட்டமளித்தநின் னீர்மை கண்டுன்பதங் கும்பிட்டனன்
அட்டமத்துச்சனி யீசாவடேலிவ் வடியனையே. (6)

எட்டுத்திசையும் புகழ்கொள் நிடதத் தெழினளனைத்
தட்டுதல்வந்தும் பொய்சொல்லாத மன்னரிச்சந்திரனை
நிட்டுரஞ் செய்ததைக் கேட்டுன்பதமலர் சேர்ந்தடைந்தேன்
அட்டமத்துச்சனி யீசாவடேலிவ் வடியனையே (7)

துட்டர்வெருவு ந்திரிசங்கை வானிடைத் தூங்கவைத்தாய்
சிட்டர்புகழு மிராமனைக் கானிற்றிரிய வைத்தாய்
மட்டிலடங்கா நின்கொள்கை கேட்டுனை வாழ்த்திநின்றேன்
அட்டமத்துச்சனி யீசாவடேலிவ் வடியனையே. (8)

மட்டிலமரரை நோய் செய்யிலங்கையின் மன்னவனை
நட்டெழுமாமுனி வோர் சுமந்தேகு நகுடனையுஞ்
சுட்டபுண்போ னலிதன்மை யறிந்துனைத் தோத்திரித்தேன்
அட்டமத்துச்சனி யீசாவடேலிவ் வடியனையே. (9)

கட்டப்படுத்திடுஞ் சன்ம மிரண்டு கருதுமைந்து
தட்டுதல்செய் பனிரெண்டினு நீபுரி சங்கடத்தை
வெட்டென வென்னுழிச்செய்யிற் பொறுக்கேன் மிகத்தளர்
அட்டமத்துச்சனி யீசாவடேலிவ் வடியனையே. [ந்தேன் (10

இட்டருந்தூற்றிடுங் காரிப்டெயரை நீயேற்றல் விட்டுச்
சிட்டர்கள் போற்றுங்கொடைக்காரி நீயெனச்செப்புதற்கும்
எட்டுத்திசையு மெனக்குப் புகழ்பரந் தேறுதற்கும்
அட்டமத்துச்சனி யீசாவடேலிவ் வடியனையே. (11)

சனீஸ்வரபகவான் தோத்திரப்பதிகம்
முற்றிற்று.

---

சனீஸ்வர தோத்திரத்தையும், நவக்கிரக தோத்திரத்தையும் யாராமொருவர் நாள்தோரும் நியமமாகப் பூஜித்துப் பாராயணஞ் செய்கின்றார்களோ. அவர்களுக்கு நிறைந்த ஆயுளையும், செல்வத்தையும், ஞானத்தையும், கல்வியையும், போகத்தையும், புத்திரப் பேற்றையும், கீர்த்தி முதலான நலன்களெலாம் உண்டாவதோடு அவர்களா லுண்டாகும் இடுக்கணெல்லாம் தீர்ந்து சுகமாக வாழ்வார்கள்.

உ

கடவுள் துணை.

# நவக்கிரக தோத்திரம்.

## சூரியன்.

காசினியிருளை நீக்குங் கதிரொளியாகி யெங்கும்
பூசனையுலகோர் போற்றப் புசிப்பொடு சுகத்தை நல்கும்
வாசியே ழுடையதேர்மேன் மகாகிரி வலமாய்வந்த
தேசிகா வெனை ரட்சிப்பாய் செங்கதிரவனே போற்றி (1)

## சந்திரன்.

அலைகட லதனினின்று மன்றுவந் துதித்தபோது
கலைவளர் திங்களாகிக் கடவுளரெவருமேத்துஞ்
சிலைநுதலுமையாள் பங்கன் செஞ்சடைப் பிறையாய் மேரு
மலைவல மாகவந்த மதியமே போற்றி போற்றி. (2)

## செவ்வாய்

வசனநற் றைரியத்தோடு மன்னவர் சபையில் வார்த்தை
புசபல பராக்ரமங்கள் போர்தனில் வெற்றி யாண்மை
நிசமுடனடியவர்க்கு நீணிலந்தனிலளிக்கும்
குசனிலமகனுஞ் செவ்வாய் குறைகழல் போற்றிபோற்றி(3)

## புதன்

மதனநூல் முதலா நான்கு மறைபுகல் கல்விஞானம்
விதமுட னவரவர்க்கு விஞ்சைகளருள்வோன் றிங்கள்
சுதன்கன பவுசு பாக்யஞ் சுகம்பல கொடுக்கவல்லன்
புதன்கவி புலவன் சீர்மால் பொன்னடி போற்றி போற்றி(4)

## குரு

மறைமிகு கலைநூல் வல்லோன் வானவர்க்காசான் மந்திரி
நறைசொரி கற்பகப்பொன் னாட்டினுக் கதிபனாகி
நிறைதனஞ் சிவிகை மண்ணி னீடுபோகத்தை நல்கு
மிறையவன் குருவியாழ னிருமலர்ப் பாதம்போற்றி. (5)

## சுக்கிரன்

மூர்க்கவான் சூரன்வாணன் முதலினோர் குருவாய்வையங்
காக்கவான் மழைபெய்விக்குங் கவிமகன் கனகமீவோன்
தீர்க்கவானவர்கள் போற்றச் செத்தவர் தமையெழுப்பும்
பார்க்கவன் சுக்கிராச்சாரி பாதபங்கயங்கள் போற்றி (6)

## சனி

முனிவர்க டேவரேனும் மூர்த்திகள் முதலினோர்கள்
மனிதர்கள் சகல வாழ்வுன் மகிமைய தல்லாலுண்டோ
கனிவுள தெய்வம் நீயே கதிர்சேயே காகமேறுஞ் (7)
சனியனே நள்ளாற்றில்வாழ் தமியனேற் கருள்செய்வாயே

## இராகு

வாகுசேர் நெடுமான் முன்னம் வானவர்க் கமுதமீயும்
போதுறுகாலையுன்றன் புணர்ப்பினாற் சிரமேயற்று
பாகுசேர் மொழியாள்பங்கன் பரன்கையில் மீண்டுப்பெற்ற
இராகுவே யுனைத்துதிப்பேன் ரட்சிபுரட்சிப்பாயே. (8)

## கேது

பொன்னையி னுரத்திற் கொண்டோன் புலவர்தம் பொருட்
[டாலாழி
தன்னையே கடைந்து முன்னந் தண்ணமுதளிக்கலுற்ற
பின்னைநின் கரவாலுண்ட பெட்பினிற் சிரம்பெற்றுய்ந்தா
யென்னையாள் கேதுவேயிவ் விருநிலம் போற்றத்தானே (9)

நவக்கிரக தோத்திரம்
முற்றிற்று.

139920